# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 1955 - 2016 පෙබරවාරි මස 19 වැනි සිකුරාදා - 2016.02.19

*1955 ஆம் இலக்கம் - 2016 ஆம் ஆண்டு பெப்புருவரி மாதம் 19 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I : தொகுதி (IIஆ) - விளம்பரங்கள்

(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளன.)


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| கேள்விப்பத்திர அறிவித்தல்கள் | 280 | உத்தியோகத் தொடர்பற்ற அறிவித்தல்கள் | 281 |
| கேள்விப்பத்திர முடிவுகள் பற்றிய அறிவித்தல்கள் | - | அந்நிய குடிவகை உத்தரவுச்சீட்டு விண்ணப்பங்கள் | - |
| பொருட்கள் விற்பனவும் பிறவும் | - | ஏல விற்பனைகள் | 284 |
| ஆய விற்பனையும் குத்தகையும் | - | நானாவித அறிவித்தல்கள் | - |


### *வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான*

### *முக்கிய அறிவித்தல்கள்*

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.*

*வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை* ***வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்.*** *இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.*

*வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு* ***இரண்டு வாரங்களுக்கு முன்னர்,*** *அதாவது 2016, மாச்சு மாதம் 11 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2016, பெப்புருவரி மாதம் 26 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.*

***2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டத்தின் 9 ஆம் பிரிவு***

*“ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரன் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்.”*

**டபிள்யூ. ஏ. ஏ. ஜீ. பொன்சேக்கா,**
*அரசாங்க அழுத்தகர் (பதில்).*

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
*கொழும்பு 8,*
*2016 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01ஆந் திகதி.*
*இவ்வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

# கேள்விப்பத்திர அறிவித்தல்கள்

***காணி அமைச்சு***

*இலங்கை நில அளவைத் திணைக்களம் விலைமனுக் கோரல்*

***பிரதேச நில அளவை அலுவலகங்களுக்கு கட்டிடங்களை வாடகைக்கு பெற்றுக்கொள்ளல் - 2016***

*கீழ்க்குறிப்பிடப்பட்டுள்ள பிரதேச நிலஅளவை அலுவலகங்களுக்கு கட்டிடங்களை இரண்டு வருட காலத்திற்கு வாடகைக்குப் பெற்றுக்கொள்வதற்கு சம்பந்தப்பட்ட மாகாண நில அளவையாளர் நாயகங்களின் அலுவலகங்களில் விலைமனுக்கோரல்கள் 2016. 02.25 ஆந் திகதியன்று பிற்பகல் 2.00 மணிவரை ஏற்றுக்கொள்ளப்படும். அன்றைய தினம் விலைமனுக் கோரல்கள் பி. ப. 2.05 மணிக்கு திறக்கப்படும்.*

***அட்டவணை***

| *மாகாணம்* | *மாவட்டம்* | *பிரதேச நில அளவை அலுவலகம்* | *கேள்விமனு ஒப்படைத்தல்* | *அருகில் உள்ள நகரம்* | *தேவைப்படும் திகதி* |
|---|---|---|---|---|---|
| *வட மத்திய மாகாணம்* | *பொலநறுவை* | *ஹிங்குரக்கொட* | *மாகாண நில அளவையாளர் நாயகம் (வட மத்திய மாகாணம்), மாகாண நில அளவையாளர் நாயக அலுவலகம், அநுராதபுரம்* | *மின்னேரியவுக்கு அருகாமையில்* | *2016.03.15* |

***பூரணப்படுத்தப்பட வேண்டிய பொதுவான தேவைப்பாடுகள் :***

*அனைத்துக் கட்டிடங்களும் பாதுகாப்பு சுற்றுமதில் அல்லது கம்பி வேலி மூலமாக பாதுகாக்கப்பட்டிருத்தல் வேண்டும். தண்ணீர்க் குழாய் வசதிகளைக் கொண்டிருப்பதுடன் அழுக்குகள் மற்றும் வடிநீர் செல்வதற்கான முறையான வடிகாலமைப்பு இருத்தல் வேண்டும். தனியான நீர்மாணி மற்றும் மின்மாணி என்பன வேறு வேறாக பொருத்தப்பட்டிருத்தல் வேண்டும். உரிய இடத்திற்கு அண்மித்த பிரதேசங்களில் இருந்து அதிக ஒலியை எழுப்பக்கூடிய தொழிற்சாலைகளோ அல்லது அது போன்ற வேறு ஏதாவது பட்டறைகளோ இல்லாதிருத்தல் வேண்டும். கட்டிடம் தாபிக்கப்பட்டிருப்பது பெருந்தெருவுக்கு அண்மித்ததாக இல்லாதிருப்பின் அதற்குச் செல்வதற்கு முறையான போக்குவரத்துப் பாதை இருத்தல் அவசியமாகும்.*

*கீழே தரப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கமைவாக தயாரிக்கப்பட்ட விண்ணப்பப்படிவத்தினைப் பூரணப்படுத்தவேண்டிய பொதுவான தேவையான சகல விபரங்களுடனான விலைமனுக்கோரல் அது அடங்கிய தபாலுறையின் இடது பக்க மேல் மூலையில் ''பிரதேச நில அளவை அலுவலகங்களை வாடகைக்கு பெறுதல் ( இடத்தின் பெயர்)''எனக் குறிப்பிட்டு 2016.02.25 ஆந் திகதி அன்று பிற்பகல் 2 மணிக்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக சம்பந்தப்பட்ட மாகாண நிலஅளவையாளர் நாயகம் அலுவலகத்திற்கு பதிவுத் தபாலில் அனுப்பி வைக்கப்படவோ அல்லது நேரடியாகவோ கையளிக்கப்படவோ வேண்டும்.*

*நிலஅளவையாளர் நாயகம்.*

*நிலஅளவையாளர் நாயகம் அலுவலகம்,*
*கிருல வீதி,*
*கொழும்பு 5.*
*2016, பெப்புருவரி 01.*

*மாதிரி விண்ணப்பப்படிவம்*

***பிரதேச நிலஅளவை அலுவலகங்களுக்கு கட்டிடங்களை வாடகைக்குப் பெற்றுக்கொள்ளல் - 2016***
***விலைமனுக்கோரல்- 2016***

*கட்டிட உரிமையாளர் விபரம் -*

1. *முழுப்பெயர் :----.*
2. *முகவரி :----.*
3. *தொலைபேசி இலக்கம் :----.*
4. *தேசிய ஆள் அடையாள அட்டை இலக்கம் :----.*

கட்டிடம் தொடர்பாக-

1. எந்த பிரதேச நிலஅளவை அலுவலகத்திற்காக கட்டிடம் வாடகைக்கு வழங்கப்பட்டுள்ளது ? :----.
2. மாதாந்த வாடகைத் தொகை :----.
3. தாபிக்கப்பட்டுள்ள இடத்தின் முகவரி :----.
4. உரிய நகரத்திலிருந்து தாபிக்கப்பட்டுள்ள இடத்திற்கு உரிய தூர அளவு கி. மீ. :----.
5. இடத்தின் விஸ்தீரணம் :----.
6. கட்டிடத்தின் சதுர அடி அளவும் அறைகளின் எண்ணிக்கை தொடர்பான விபரங்கள் :----.
7. தனியாக அவதானிக்கக்கூடிய நீர்மாணி பொருத்தப்பட்டுள்ளதா ? :----.
8. தனியாக அவதானிக்கக்கூடிய மின்மாணி பொருத்தப்பட்டுள்ளதா ? :----.
9. பாதுகாப்பு எல்லை தொடர்பான விபரம் (மதில்/கம்பி வேலி/ .................... ) :----.
10. நிறுத்திவைக்கக்கூடிய வாகனங்களின் எண்ணிக்கை ? :----.
11. பிரதான வீதிக்குச் செல்வதற்கு எடுக்கும் நேர அளவு ? :----.
12. நல்ல முறையில் நிர்மாணிக்கப்பட்டுள்ளதா ? விபரம் தரவும் :----.
13. தொலைபேசி வசதி இருப்பின், தொலைபேசி இலக்கம் :----.

மேலே என்னால் தரப்பட்டுள்ள தகவல்கள் யாவும் உண்மையானவை என்றும், வழங்கப்பட்டுள்ள தகவல் தவறானது எனத் தெரியவரும் பட்சத்தில் என்னால் அனுப்பப்பட்டுள்ள இந்த விலை மனு நிலஅளவையாளர் நாயகத்தினால் நிராகரிக்கப்படும் என்பதனை நான் நன்கு அறிவேன் என்றும் இத்தால் அறியத்தருகிறேன்.

----,
விண்ணப்பதாரரின் கையொப்பம்.

2- 479

---

# உத்தியோகத் தொடர்பற்ற அறிவித்தல்கள்

## அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(1) ஆம் பிரிவின்கீழ் :-

கம்பனியின் பெயர் : தக்மா விஷன் (பிறைவேட்) லிமிட்டெட்
இலக்கம் : பிவி 111480
திகதி : 2016, சனவரி 25
பதிவு செய்யப்பட்ட முகவரி : இல. 172, ஹல்ஸ்ரோப் வீதி, கொழும்பு 12
கம்பனி செயலாளர்கள் : சி. பாலித ஜே. டபிள்யூ. மத்தியு லிமிட்டெட், SEC/1159/94

2-459

---

## அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(1) ஆம் பிரிவின் கீழான அறிவித்தல் :-

கம்பனியின் பெயர் : எஸ்டெக் சொலுஷன்ஸ் (பிறைவேட்) லிமிட்டெட்
கம்பனியின் பதிவு இல. : பீவீ 111119
கூட்டிணைப்புத் திகதி : 2016, சனவரி 12
கம்பனியின் பதிவு அலுவலகத்தின் முகவரி : இல. 263/D, கடுவல வீதி,தலங்கம வடக்கு, கொஸ் வத்த, பத்தரமுல்ல

குடாபன தொன் புத்திக ஹன்சினி சுபசிங்க,
கம்பனிப் பணிப்பாளர்.

2-466

---

## கம்பனியின் பெயர் மாற்றம் தொடர்பானஅறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(2) ஆம் பிரிவின் தொடர்பானது :-

முன்னைய பெயர் : கிரெட்லே எஸ்டேட்ஸ் (பிறைவேட்) லிமிட்டெட்
இலக்கம் : பிவி 69531
முகவரி : இல. 40, கோல்பேஸ் கோட் 2, கொழும்பு 3
புதிய பெயர் : த சிலோன் சினமன் பிலான்டேர்ஸ் கலெக்டிவ் (பிறைவேட்) லிமிட்டெட

செக்கிரடேரியஸ் (பிறைவேட்) லிமிட்டெட்,
பிவி 5958.

2-502

---

## அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9ஆம் பிரிவின்கீழ், கீழ்வரும் கம்பனி கூட்டிணைக்கப்பட்டதாக இத்தால் அறிவிக்கப்படுகின்றது :-

கம்பனியின் பெயர் : பொலாரிஸ் எனர்ஜி லங்கா (பிறைவேட்) லிமிட்டெட்
கம்பனி இல. : பீவீ 111344
பதிவு முகவரி : இல. 102, யூனியன் பிளேஸ் , கொழும்பு 2
கூட்டிணைக்கப்பட்ட திகதி : 2016, சனவரி 19

கம்பனிச் செயலாளர்கள்,
கோர்ப்பரேட் அட்வைசரி சேர்விசஸ்
(பிறைவேட்) லிமிட்டெட்.

2-512

## அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9 ஆம் பிரிவின்கீழ், பின்வரும் கம்பனி கூட்டிணைக்கப்பட்டதாக இத்தால் அறிவிக்கப்படுகின்றது :-

கம்பனியின் பெயர் : சன்ரே எஸ் எல் (பிறைவேட்) லிமிட்டெட்
பதிவிலக்கம் : பீவீ 109344
பதிவு முகவரி : இல. 47, அலெக்ஸான்ட்ரா பிளேஸ், கொழும்பு 7
கூட்டிணைக்கப்பட்ட திகதி : 2015, ஒற்றோபர் 23

கம்பனிச் செயலாளர்கள்.
கோர்ப்பரேட் அட்வைசரி சேர்விசஸ்
(பிறைவேட்) லிமிட்டெட்,

2-513

---

## பொது அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(1) ஆம் பிரிவின்கீழ், பின்வரும் கம்பனி கூட்டிணைக்கப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது :-

கம்பனியின் பெயர் : டி என்ட் டி எபரல் (பிறைவேட்) லிமிட்டெட்
பதிவிலக்கம் : பீ வீ 111052
கூட்டிணைப்புத் திகதி : 2016, சனவரி 06
பதிவு முகவரி : இல. 217/பீ, கொழும்பு வீதி, திவுலப்பிட்டி, பொரலஸ்கமுவ

2-532

---

## பொது அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(1) ஆம் பிரிவின்கீழ், கீழ்வரும் கம்பனி கூட்டிணைக்கப்பட்டுள்ளதென அறிவிக்கப்படுகின்றது :-

கம்பனியின் பெயர் : ஸ்கய் விங்ஸ் டிரெவல்ஸ் & டுவர்ஸ் (பிறைவேட்) லிமிட்டெட்
கம்பனியின் பதிவு இல. : பீவீ 91300
பதிவுத் திகதி : 2013, மாச்சு 01
பதிவு முகவரி : இல. 15, கடுகண்ணாவ வீதி, கம்பளை

மொஹமட் ஹதீம் கான் மொஹமட் அரபாத்
பணிப்பாளர்

2-553

---

## கம்பனியின் பெயர் மாற்றம் தொடர்பான அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிச் சட்டத்தின் 9(2) ஆம் பிரிவின் பிரகாரம் கீழே வழங்கப்பட்டுள்ள விபரங்களடங்கிய கம்பனியின் பெயர் மாற்றப் பொது அறிவித்தலை நாம் இத்தால் வழங்குகின்றோம் :-

கம்பனியின் முன்னைய பெயர் : இன்சிடியுட் ஒவ் பிஸ்னஸ் மெனேஜ்மன்ட் கன்சல்டன்சி (பிறைவேட்) லிமிட்டெட்
கம்பனி பதிவு இலக்கம் : பிவி 14323-1999, மே 05 என திகதியிடப்பட்டது
பதிவு அலுவலக முகவரி : இல. 419/1/1, ஹைலெவல் வீதி, தெல்கந்த, நுகேகொடை
கம்பனியின் புதிய பெயர் : ஐபிஎம்சி லங்கா (பிறைவேட்) லிமிட்டெட்

திகதி : 2015.12.28 எனத் திகதியிடப்பட்டது

2016, சனவரி 22

2-620

---

## விசேட அற்றோணித் தத்துவ பத்திரத்தை இரத்துச் செய்தல்

கனடா இராஜியத்தின் பிரிட்டிஷ் கொலம்பியா பிராந்தியத்தில் நிவ் வெஸ்ட்மினிஸ்டர் ஹியும் மாவத்தையில், இல. 318 ஆம் இடத்தில் வசிக்கும் மற்றும் இரட்டை பிரஜை உரிமையுடைய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசில் வசிக்கும் அஹின்சக கொஸ்சின்ன ஆகிய நான், இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பொது மக்களுக்கு அறியத்தருவதாவது கல்கிஸ்ஸை, டெம்ப்லர்ஸ் வீதி, சொய்சா மாவத்தையில், இல. 05 கொண்ட இடத்தில் வசிக்கும் சாமலி வீரசிங்க அவர்களுக்கு கனடா நொத்தாரிசு கிறிஸ்டோபர் டபிள்யூ. டுபுயிஸ் என்பவரால் 2012 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 04 ஆம் திகதி எழுதி அத்தாட்சிப்படுத்திய மற்றும் இலங்கை பதிவாளர் நாயகம் அலுவலகத்தில் முறையாக பதிவு செய்யப்பட்ட இல. 6529 மற்றும் 2012 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 14 ஆம் திகதி கொண்ட விசேட அற்றோணித் தத்துவப்பத்திரத்தின் மூலம் வழங்கப்பட்ட அதிகாரங்களை இரத்துச் செய்ததாகவும் இவ் அற்றோணித்தத்துவப் பத்திரத்தின் கீழ் மேற்கொள்ளப்படும் எவ்வித கொடுக்கல் வாங்கலுக்கும் நான் பொறுப்புக் கூற மாட்டேன் .

அஹின்சக கொஸ்சின்ன

2016, சனவரி 29.

2-455

---

## அற்றோணித் தத்துவத்தை இரத்துச் செய்தல்

இலக்கம் 18, காலி, ஹப்புகல சரசவிய அசப்புவயில் வசிக்கும், கன்தே சுசில் ( தேசிய அடையாள அட்டை இலக்கம் 600963350 V) ஆகிய நான், காலி பிரசித்த நொத்தாரிசு கோபிகா லொகுகே என்பவரால் 2013.06.14 ஆந் திகதியன்று அத்தாட்சிப்படுத்தப்பட்ட 2553 என்ற இலக்கம் கொண்ட அற்றோணி தத்துவ பத்திரம் மூலம் வியாலே, இட்டாலியா, 15, 70090, இயாவே, SS இட்டாலி என்ற விலாசத்திலும் தற்போது இலக்கம் 139, காலி வீதி, பிட்டிவெல்ல, பூஸ்ஸவிலும் வசிக்கும் டப்ரனோ வின்சென்சோ ( கடவுச் சீட்டு இலக்கம் AA 0112890) ஆகியவருக்கு என்னால் வழங்கப்பட்ட அற்றோணித் தத்துவம் 2016. 01 30 ஆம் திகதியிலிருந்து இரத்துச் செய்யப்பட்டு இல்லாதொழிக்கப்பட்டுள்ளது என்பதை இத்துடன் தொடர்புபட்ட அனைவருக்கும் பொது மக்களுக்கும் இத்தால் அறிவித்துக் கொள்கிறேன். மேற்குறிப்பிட்ட அற்றோணி தத்துவக்காரரால் மேற்குறிப்பிட்ட அற்றோணி தத்துவப்பத்திரம் மூலம் மேற்கொள்ளப்படும் செயற்பாடுகள் எதற்கும் நான் பொறுப்பேற்க போவதில்லை எனவும் இத்தால் அறிவித்துக்கொள்கின்றேன்.

கன்தே சுசில்

2016, சனவரி 30.

2-475

## அற்றோணித் தத்துவத்தை இரத்துச் செய்தல்

இலக்கம் 18, காலி ஹப்புகல, சரசவிய அசப்புவயில் வசிக்கும், கன்தே சுசில் ( தேசிய அடையாள அட்டை இலக்கம் 600963350 V) ஆகிய நான், காலி பிரசித்த நொத்தாரிசு உளுவிட்டிகே கமகே தமரணி காரியவசம் என்பவரால் 2013.06.12 ஆந் திகதியன்று அத்தாட்சிப்படுத்தப்பட்ட 08ஆம் இலக்கம் கொண்ட அற்றோணி தத்துவ பத்திரம் மூலம் வியாலே, இட்டாலியா, N 15, கியாவே, SS இட்டாலி என்ற விலாசத்திலும் தற்போது இலக்கம் 141, காலி வீதி, பிட்டிவெல்ல, பூஸ்ஸவிலும் வசிக்கும் வின்சென்சோ டீ' அப்ரமோ ( கடவுச் சீட்டு இலக்கம் AA 0112890) மற்றும் கெட்டரினா நொயெல்லோ (கடவுச் சீட்டு இலக்கம் AA2433429) ஆகியஇரு வருக்கு என்னால் வழங்கப்பட்ட அற்றோணித் தத்துவம் 2016. 01.30ஆம் திகதியிலிருந்து இரத்துச் செய்யப்பட்டு இல்லா தொழிக்கப்பட்டுள்ளது என்பதை இத்துடன் தொடர்புபட்ட அனைவருக்கும் பொது மக்களுக்கும் இத்தால் அறிவித்துக்கொள்கிறேன். மேற்குறிப்பிட்ட அற்றோணி தத்துவக்காரரால் மேற்குறிப்பிட்ட அற்றோணி தத்துவப்பத்திரம் மூலம் மேற்கொள்ளப்படும் செயற்பாடுகள் எதற்கும் நான் பொறுப்பேற்க போவதில்லை எனவும் இத்தால் அறிவித்துக்கொள்கின்றேன்.

கன்தே சுசில்

2016, சனவரி 30.

2-476

---

## அற்றோணித் தத்துவத்தை இரத்துச் செய்தல்

பிட்டகோட்டை, பெத்தகான வீதி வடக்கு, இல. 62 A இல் வதியும் ஹெட்டி ஆராச்சிகே ஆனந்த ஹெட்டி ஆராச்சி ஆகிய நான், கோட்டை எதுல் கோட்டே மஹிந்தாராம வீதி, இல. 45 B என்னும் விலாசத்தில் முன்பு வசிக்கும் குறுப்பு ஆரச்சிகே குமாரி வைஜயந்திமாலா ஹெட்டி ஆராச்சி அவர்களுக்கு கொழும்பு பிரசித்த நொத்தாரிசு திரு. என். என். பீ. குமாரசிங்ஹ அவர்களால் எழுதி அத்தாட்சிப்படுத்தப்பட்டு வழங்கிய 1992, யூன் 09 ஆந் திகதியிடப்பட்ட 6818 ஆம் இலக்க அற்றோணித் தத்துவத்தை இங்கு குறிப்பிட்ட தினத்திலிருந்து இரத்து செய்வதோடு அது செயலில் இல்லை என இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசுக்கும் பொது மக்களுக்கும் இத்தால் அறியத்தருகின்றேன்.

ஹெட்டி ஆராச்சிகே ஆனந்த ஹெட்டி ஆராச்சி.

2016, பெப்புருவரி 5.

2-487

---

## அற்றோணித் தத்துவத்தை இரத்துச் செய்தல்

கோட்டே 300/12, பர்ட் பார்க், தலவதுகொட வீதி, மெதிவலை என்ற முகவரியில் வதியும் ருவண்தி சிவபிரகாசம் ஆகிய நான் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசுக்கும் அதன் பொது மக்களுக்கும் இத்தால் அறிவித்துக் கொள்வது, ஸகோப் குளோபல் பிறைவெட் லிமிட்டெட்டினால் எனக்கு வழங்கப்பட்டிருந்த அற்றோணி அதிகாரம் உடனடியாக அமுலுக்கு வரும் வகையில் இரத்து செய்யப்பட்டு இல்லாதொழிக்கப்பட்டு விட்டதாகவும், அவ்வதிகாரத்தின் கீழ் செயலாற்றுவதை நிறுத்திக் கொண்டுள்ளேன் என்பதாகும்.

(திருமதி) ருவண்தி சிவபிரகாசம்,
கொழும்பு .

2016, சனவரி 29.

2-517

---

## அற்றோணித் தத்துவத்தை இரத்துச் செய்தல்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் ராஜகிரிய மெத வெலிகட வீதி, இலக்கம் 81 இல் வதியும் ( தேசிய அடையாள அட்டை இலக்கம் 741200872 V) ஐ உடைய நாவின்ன ஆரச்சிகே நிரோஷ் சமிந்த பெரேரா ஆகிய என்னால் ராஜகிரிய மெத வெலிகட வீதி, இலக்கம் 81 இல் வதியும் (தேசிய அடையாள அட்டை இலக்கம் 807480120 V) ஐ உடைய குமுதிதா வத்துஹேவா என்பவருக்கு பிரசித்த நொத்தாரிசு திரு. லக்ஷ்மன் பண்டிதரத்ன என்பவரினால் 2007 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 16ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்ட இலக்கம் 11749 உடைய அற்றோணி அதிகாரம் ( 2016.01. 30 ஆந் திகதி முதல் இரத்து செய்யப்பட்டு இல்லாதொழிக்கப்படுவதாக இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசுக்கும் அனைத்து பொது மக்களுக்கும் இத்தால் அறிவித்துக் கொள்கின்றேன். இன்று முதல் குமுதிதா வத்துஹேவா என்பவர் எனது பெயரை உபயோகித்து மேற் கொள்ளும் எந்தவொரு நடவடிக்கையையும் நான் பொறுப்பேற்கப் போவதில்லையெனவும் மேலும் அறிவித்துக்கொள்கின்றேன்.

2-604

---

## அற்றோணித் தத்துவத்தை இரத்துச் செய்தல்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு மற்றும் அனைவருக்கும் தெரிந்து கொள்ளும் வகையில் இவ்வறிவித்தல் விடுக்கப்படுகின்றது.

ஹோகந்தர, ஹோகந்தர வடக்கு, கந்துஸார மாவத்தை, இலக்கம் 343/3பீ என்ற இடத்தில் வதியும் கம்லக்ஷகே பிரியங்கா ஸரோஜினி செனெவிரத்ன ( தே. அ. அ.இல. 748201971 V உடைய) ஆகிய என்னால் கொழும்பு மாவட்டத்தில் சட்டத்தரணி மற்றும் பிரசித்த நொத்தாரிசு திரு.தொன் சமிந்த ப்ரீதி விராஜ் விக்கிரமரத்ன என்பவரால் 2012.03.05 அன்று எழுதி அத்தாட்சிப்படுத்தப்பட்ட இலக்கம் 284 உடைய அற்றோணித் தத்துவத்தின் மூலம் அம்முகவரியிலேயே வதியும் பெட்டகன் பவரசிறி த சில்வா ( தே. அ.அ.இல. 383040531 V ஐ உடைய) என்பவருக்கு வழங்கப்பட்ட அற்றோணித் தத்துவம் இரத்து செய்யப்பட்டு இல்லாதொழிக்கப்படுவதாக இத்தால் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பொது மக்களுக்கு அறிவித்துக் கொள்ளப்படுகின்றது. இது முதற்கொண்டு பெட்டகன் பவரசிறி த சில்வா என்பவரால் இவ் அற்றோணித் தத்துவத்தை உபயோகித்து மேற்கொள்ளப்படும் எந்தவொரு நடவடிக்கை தொடர்பாகவும் என்னால் பொறுப்பேற்கப்பட மாட்டாது எனவும் இத்தால் அறிவித்துக் கொள்கின்றேன்.

2-634

# ஏல விற்பனைகள்

## டீஎப்சீசீ வங்கி பீஎல்சீ

*(முன்னர் டீஎப்சீசீ வங்கி என அழைக்கப்பட்டது)*

*1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்களை மீள அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 8ஆம் பிரிவின் கீழான விற்பனை*

**பெறுமதிமிக்க சொத்துக்கள் ஏல விற்பனை**

***1150 ஆம் இலக்க பிணை உறுதிகள் மூலம் அடகு வைக்கப்பட்ட உடைமைகளின் விபரம்***

***சப்பிரகமுவ மாகாணம், இரத்தினபுரி மாவட்டம், நவதுன் கோரளை மெதபற்று கனேகொட கிராமத்தில் அமைந்துள்ள அட்டகல்லேஹேனேவத்த எனவும், அட்டகல்லேஹேன என அழைக்கப்படும் அனுமதிப்பத்திரம் பெற்ற நில அளவையாளர் கே.நந்தசேன அவர்களால் வரையப்பட்ட 2006 ஆம் ஆண்டு மாச்சு மாதம் 6 ஆந் திகதியிடப்பட்ட மிகச் சரியாகக் குறிப்பிடுவதாயின் 2006 ஆம் ஆண்டு மாச்சு மாதம் 20 ஆந் திகதிய 2455 ஆம் இலக்க வரைபடத்தில் குறிப்பிடப்படும் காணித்துண்டு***

***(காணியின் விஸ்தீரணம் : 0ஏ. 0றூ. 28பே.)***

***அதிலுள்ள அனைத்தும் அடங்கலாக இரத்தினபுரி காணிப் பதிவகத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது.***

*இரத்தினபுரி பிரசித்த நொத்தாரிசு ஜே. ஏ. ரணசிங்க அவர்களால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட 2011 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 22 ஆம் திகதியிடப்பட்ட 1150 ஆம் இலக்க பிணை உறுதி மூலம், இரத்தினபுரி றிஹான டிரேட் சென்டர் எனும் பெயரில் வியாபாரத்தைக் கொண்டு நடத்தி வரும் மொஹமட் அமீன் மொஹமட் ஷாபி அவர்களால் டீஎப்சீசீ வங்கி பீஎல்சீ க்கு ( முன்னர் டிஎப்சீசீ வங்கி) அடகுவைக்கப்பட்டு மீட்கப்படாத சொத்து டீஎப்சீசீ வங்கியினால் எமக்களிக்கப்பட்ட அதிகாரத்தின் படி 2016ஆம் ஆண்டு மாச்சு மாதம் 09 ஆந் திகதி புதன்கிழமை மு. ப. 11.00 மணிக்கு எம்மால் ஸ்தலத்தில் பகிரங்க ஏல விற்பனைக்கு விடப்படும்.*

**கொடுப்பனவு செய்யும் முறை.-** *ஏலவிற்பனையில் வெற்றிபெற்ற கொள்வனவாளர், விற்பனையின் முடிவில் பின்வரும் தொகைகளை ரொக்கப் பணமாகச் செலுத்த வேண்டும் :-*

*(1) கொள்வனவு செய்யப்பட்ட விலையின் 10% (பத்து சதவீதம்) ;*
*(2) உள்ளூர் அதிகார சபைக்குச் செலுத்தப்படவேண்டிய விற்பனை வரி 1% (ஒரு சதவீதம்) ;*
*(3) விற்பனை விலையில் ஏலதாரர் தரகு 2.5% (இரண்டரை சதவீதம்) ;*
*(4) மொத்த விளம்பரச் செலவு 1,01,000 ரூபா ;*
*(5) எழுதுவினைஞர் மற்றும் ஏலம் கூறுவோர் கட்டணம் 500 ரூபா;*
*(6) விற்பனை நிபந்தனைகளுக்கான நொத்தாரிசுக் கட்டணம் 2,000 ரூபா.*

*கொள்முதல் விலையின் மிகுதி 90% விற்பனையின் பின்னர் 30 நாட்களுக்குள் சட்ட ரீதியான விதிப்பனவுகள், தீர்வைகள், வரிகள் அல்லது இலங்கை அரசாங்கத்தினால் அல்லது வேறு ஏதாவது அதிகார சபையினால் அவ்வப்போது விதிக்கப்படுகின்ற கட்டணங்களுடன் சேர்த்து செலுத்தப்படல் வேண்டும்.*

**மேலதிக விபரங்களுக்கு.-** *011-2371371 என்னும் தொலைபேசி இலக்கம் மூலம் டீஎப்சீசீ வங்கி பீஎல்சீ யின் சட்டப் பிரிவுடன் தொடர்பு கொள்ளவும்.*

*'முன்னறிவித்தலின்றி ஏலவிற்பனையை நிறுத்தும்/இரத்துச் செய்யும் அதிகாரம் வங்கிக்குள்ளது.'*

*சொக்மன் அன்ட் சமரவிக்ரம,*
*ஒரே நாடு, ஒரே ஏலவிற்பனையாளர்,*
*124 வருடகால மகோன்னத சேவை.*

| *தலைமை அலுவலகம் :* | *நகர அலுவலகமும் காட்சியறையும்:* |
|---|---|
| *24, டொரிங்டன் வீதி, கண்டி.* | *290, ஹவ்லொக் றோட், கொழும்பு 5.* |
| *தொலைபேசி : 081-2227593* | *தொலைபேசி : 011-2502680, 011-2585408* |
| *தொ.பே./ ஃபக்ஸ் : 081-2224371* | *தொ.பே./ ஃபக்ஸ் : 011-2588176* |
| *மின்-அஞ்சல்* : schokmankandy@sltnet.lk | *மின்-அஞ்சல்* : schokman@samera1892.com |

*இணையத்தளம்* : www.sandslanka.com

*2-529*

---

## ஹட்டன் நஷனல் வங்கி பீஎல்சீ – பொரளை கிளை

*1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்களை மீள அறவிடுதல் (விசேடஏற்பாடுகள்) சட்டத்தின் 4ஆம் பிரிவின்கீழ் விற்பனை*

**வசிப்பிடத்திற்குச் பொருத்தமான இருமாடிக் கட்டிடம் ஏலவிற்பனை**

***ஸ்ரீ ஜயவர்தனபுர கோட்டே மாநகர சபை எல்லைக்குட்பட்ட ராஜகிரிய, ஒபேசேகரபுர நாணாயக்கார மாவத்தையினுள் கோதமி காடன்ஸ் இல் அமைந்துள்ள துடுவேகும்புர எனும் காணி உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் எஸ். யோகநாதன் என்பவரினால் தயாரிக்கப்பட்ட 1999.12.02 ஆந் திகதிய 4748/1998 ஆம் இலக்க வரைபடத்தில் குறிக்கப்பட்ட பிரித்தொதுக்கப்பட்ட லொட் 8 ஏஎனும் காணித்துண்டும் அதனுள் அடங்கும் நாணாயக்கார மாவத்தை, வரிப்பண இல. 181 ஏ57 181 ஏ 57 1/1 சொத்தும் மற்றும் சகலதுமாகும்.***

***(காணியின் விஸ்தீரணம் : 7.75 பேர்ச்சஸ்)***

*(இவ்வாதனம் வீ 2 புரோப்பட்டி மெனேஜ்மன்ட் சர்விசஸ் (பிறைவெட்) லிமிட்டெட் கடப்பாடுடையதாக வழங்கப்பட்ட கடன் வசதிகளுக்காக ஹற்றன் நஷனல் வங்கி பீ.எல்.சீ. இற்கு ஈடுவைக்கப்பட்ட சொத்து)*

**ஆதனத்தை வந்தடைதல்**.- பொரளையிலிருந்து டாக்டர் என். எம்.பெரேரா மாவத்தையூடாக ராஜகிரியவை நோக்கி கோதமி மாவத்தை வரை வந்து இடது பக்கமாகத் திரும்பி அதே மாவத்தையில் சந்திக்கும் பாலத்தைக் கடந்து அரச மரம் வரை வந்து வலது பக்கமாகத் திரும்பி சற்றுத் தூரம் சென்று மீண்டும் இடது பக்கமாகத் திரும்பி காசன்ஸ் வாடகை வாகன சேவை (Casons Rent a Car Office) அலுவலகம் வரை வந்து இடது பக்கமாகத் திரும்பி சற்று தூரம் சென்று வலது பக்கமாகத் திரும்பி சுமார் 15 மீற்றர் தூரம் சென்றால் இவ்வாதனம் இப்பாதையில் வலது பக்கத்தில் அமைந்துள்ளது.

இவ்வாதனம் 2016.03.10 ஆந் திகதி மு. ப. 11.00 மணிக்கு அதே இடத்தில் என்னால் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படும்.

**தீர்மானம் பற்றிய அறிவித்தலுக்கு**.- 2014.08.29 ஆந் திகதிய அரசாங்க வர்த்தமானியையும் 2014.09.05 ஆந் திகதிய ''லக்பிம'' ''டெயிலி மிரர்'', மற்றும் ''தினகரன்'' பத்திரிகைகளையும் பார்க்கவும்.

**கொடுப்பனவு முறை**.- விற்பனை தீர்க்கப்பட்டவுடன் கொள்வனவு செய்தவரினால் கீழ்காணும் விதத்தில் கொடுப்பனவுகள் ஏலவிற்பனை யாளரிடம் ரொக்கப்பணமாக செலுத்துதல் வேண்டும் :-

(1) கொள்முதல் விலையில் 10% (நூற்றுக்கு பத்து) ;
(2) பிரதேச சபை வரி 1% (நூற்றுக்கு ஒன்று) விற்பனை வரி ;
(3) ஏல விற்பனையாளர் கட்டணம் 2 1/2 வீதம் (நூற்றுக்கு இரண்டரை) ;
(4) சகல பகிரங்கப்படுத்தல் செலவு ;
(5) இலிகிதர் மற்றும் கூப்பிடுவோர் கட்டணம் 500 ரூபா ;
(6) விற்பனை நிபந்தனை அத்தாட்சிப்படுத்தல் கட்டணம் 2,000 ரூபா.

கொள்வனவு விலையின் மிகுதி 90 வீதமும் இலங்கை அரசினால் அல்லது வேறு அதிகார சபையினால் விதிக்கப்படும் வேறு வரிகளும், தீர்வை வரி, விற்பனை வரி அல்லது வேறு கட்டணங்கள் ஏதாயினும் செலுத்தப்பட விருப்பின் அவற்றுடன் விற்பனை நாளிலிருந்து 30 நாட்களுக்குள் செலுத்தப்படுதல் வேண்டும்.

**உரித்தாதனம் மற்றும் விபரங்களுக்கு**.- சிரேஷ்ட முகாமையாளர் (கடன் அறவிடுதல்), ஹற்றன் நஷனல் வங்கி பீஎல்சீ, இல. 479, ரீ. பி. ஜயா மாவத்தை, கொழும்பு 10 உடன் தொடர்பு கொள்ளவும். தொலைபேசி இல. : 011-2661826,011-2661835, 011-2661836.

ஐ. டப்ளியூ. ஜயசூரிய,
நீதிமன்றங்கள் மற்றும் வர்த்தக
வங்கிகளினால் உத்தரவாதம்பெற்ற
ஏல விற்பனையாளர்.

இல. 369/1, துட்டுகெமுனு மாவத்தை,
லேவெல்ல பாதை, மாவில்மட,
கண்டி.

தொலைபேசி இல. : 081-2210595, 071-4755975, 071-8446374,

2- 606

## பேன் ஏசியா வங்கி கூட்டுத்தாபனம் ப. வ. க.

*1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்களை மீள அறவிடுதல் (விசேடஏற்பாடுகள் ) சட்டத்தின் 9 ஆம் பிரிவின் கீழ் விற்பனை*

***பிரித்து நிர்ணயிக்கப்பட்ட காணித்துண்டு முழுவதும் (வடமேல் மாகாணம், புத்தளம் மாவட்டம் பிட்டிகல் கோறளைதெற்கு, கம்மள் பற்று, நாத்தாண்டிய செயலகப் பிரிவிற்குள் 494 சீ மெத கட்டுநேரி கிராம அலுவலர் பிரிவினுள், பஹல கட்டுநேரியில் அமைந் துள்ளதும் ''மதனகஹவத்தை'' என அழைக்கப்படும் காணியிலிருந்து உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் டபிள்யூ எம். எச். பெர்ணான்டோ அவர்களால் தயாரிக்கப்பட்டு 2013.04.19 ஆந் திகதியிடப்பட்ட வரைபட இல. 11375 இல் குறிப்பிடப்பட்டதும் உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் பீ. டபிள்யூ. பெர்ணான்டோ அவர்களால் தயாரிக்கப்பட்டு 2003.04.10 ஆந் திகதியிடப்பட்ட வரைபடம் இல. 1491 இல் குறிப்பிடப்பட்டதுமான துண்டு 1 என அடையாளமிடப்பட்டதுமான காணியினது) ஏல விற்பனை***

***(காணியின் விஸ்தீரணம் : 0ஏ. 0றூ. 28.60பே.)***

*(கடப்பாடுடையவர்களான முத்துனமகொன்னகே பாத்திமா எலன் பெர்னாண்டோ மற்றும் மஹா குருகே நிர்மலி உதேனி தீப்திகா பெர்னாண்டோ மற்றும் ஈடுவைத்தவரான முத்துனமகொன்னகே பாத்திமா எலன் பெர்னான்டோ வென்னப்புவவைச் சேர்ந்த பிரசித்த நொத்தாரிசு டபிள்யூ எஸ். என். திசேரா அவர்களால் அத்தாட்சிப்படுத்தப்பட்டு 2013.07.26 ஆந் திகதியிடப்பட்ட ஈட்டு முறி இல. 1369 இன் மீதான வரவேண்டிய கொடுப்பனவில் தவணை தவறியுள்ளார்கள்.)*

**ஆதனத்தைச் சென்றடையும் வழி**.- வென்னப்புவ வர்த்தக மத்திய நிலையத்திலிருந்து நீர்கொழும்பு நோக்கி நீர்கொழும்பு - சிலாபம் வீதி வழியே ஏறக்குறைய 1 கீ.மீ. வரை சென்று வெனிசீசியஸ் லோஸ் பெரேரா மாவத்தைக்கு இடப்பக்கமாகத் திரும்பி T சந்தி வரை ஏறக்குறைய 300 மீற்றர் சென்று இடது பக்கம் திரும்பி, 100 மீற்றர் தொடர்ந்து ஜயாவீதி மாவத்தைக்கு வலப்பக்கம் திரும்பி 100 மீற்றர் சென்று இடப் பக்கத்திலுள்ள விற்பனைக்குரிய இவ்வாதனத்திற்கு இட்டுச்செல்லும் தனியார் வீதிக்கு இடப்பக்கம் திரும்பவும்.

பேன் ஏசியா வங்கி கூட்டுத்தாபனம் ப.வ.க. இனால் எனக்கு அளிக்கப்பட்டுள்ள அதிகாரத்தின்கீழ் மேற்குறிப்பிடப்பட்ட ஆதனத்தை 2016, மாச்சு 10 ஆந் திகதி மு. ப. 11.00 மணிக்கு அதே இடத்தில் நான் பகிரங்க ஏலம் மூலம் விற்பனை செய்வேன்.

**தீர்மானம் பற்றிய அறிவித்தலுக்கு**.- 2016, சனவரி 29 ஆந் திகதிய அரசாங்க வர்த்தமானியையும், அதே திகதிய ''டெய்லி நியூஸ்'', ''லக்பிம'' மற்றும் ''சுடர் ஒளி'' ஆகிய பத்திரிகைகளையும் பார்க்கவும்.

**கொடுப்பனவு செய்யும் விதம்**.- வெற்றிபெற்ற கொள்வனவாளர் ஏல விற்பனை முடிவில் பின்வரும் தொகைகளை ஏலதாரருக்கு காசாக செலுத்த வேண்டும் :-

1. கொள்வனவு விலையின் 10% (பத்து வீதம்) ;
2. உள்ளூர் அதிகாரசபை கட்டணங்கள் 1% மற்றும் அதே போன்று பெ.சே.வ. கட்டணங்கள் ;
3. ஏலதாரரின் தரகு கொள்வனவு விலையின் 2.5% (இரண்டரை வீதம் மட்டும்) ;
4. மொத்த விற்பனை மற்றும் ஏனைய கட்டணங்கள் ;
5. விற்பனை நிபந்தனைகளுக்கான நொத்தாரிசு அத்தாட்சிப் படுத்தும் கட்டணம் 3,000 ரூபா ;

கொள்வனவு விலையின் மிகுதி 90% ( தொண்ணூறு வீதம்) ஐ விற்பனைத் திகதியிலிருந்து 30 நாட்களுக்குள் வங்கிக்குச் செலுத்த வேண்டும். சொல்லப்பட்ட தொகை மேற்குறிப்பிட்டவாறு 30 நாட்களுக்குள் செலுத்தப்படாவிட்டால், ஏற்கனவே செலுத்தப்பட்ட விலையின் 10% ஐத் தண்டப்பணமாக அறவிடவும் ஆதனத்தை மீள் விற்பனை செய்யவும் வங்கிக்கு அதிகாரமுண்டு.

உரித்து உறுதிகளையும் அவை தொடர்பான வேறு ஆவணங்களையும் " கொழும்பு 3, காலி வீதி, இல் 450, தலைமை அலுவலகம், பேன்ஏசியா வங்கி கூட்டுத்தாபனம் ப.வ.க. முகாமையாளர் அறவீடுகள்" அவர்களிடம் பார்வையிடவும் பெற்றுக்கொள்ளவும் முடியும். தொலைபேசி இல. 011- 4667218/011- 2565573

துசித்த கருணாரத்ன,
நீதிமன்ற ஆணையாளர் மற்றும்
உத்தரவுபெற்ற ஏலதாரர்.

இல. 182/3 (50/3) விஹார மாவத்தை,
கொலன்னாவை.
தொலைபேசி இல. 011 3068185, 011 2572940

2-617

---

## கொமர்ஷல் பேங்க் ஒப் சிலோன் பீஎல்சீ — தலவதுகொட கிளை

1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்களை மீள அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 4 ஆம் பிரிவின்கீழ் கொமர்ஷல் பேங்க் ஒப் சிலோன் பீஎல்சீ (பதிவு இலக்கம் பீகியூ 116) மூலம் எனக்களிக்கப்பட்ட அதிகாரத்தின் பிரகாரம்-

**அட்டவணை**

**மேல் மாகாணம், கொழும்பு மாவட்டம், சல்பிட்டி கோரளை பல்லே பற்றுவில், ஸ்ரீ ஜயவர்தனபுர, கோட்டே மாநகர சபைக்குட்பட்ட கோட்டே ஸ்ரீ ஜயவர்தனபுர பிரதேச செயலாளர் பிரிவிற்குட்பட்ட 522- D இலக்க கிராம அலுவலர் பிரிவில் பிடகோட்டே சுபசாதக மாவத்தை, 38/7 வரிமதிப்பீட்டிலக்கத்தில் அமைந்துள்ள உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் ஆர். டி. அபேசிங்கவினால் தயாரிக்கப்பட்ட இலக்கம் 1701 ஆம், 2009, நவெம்பர் 1 ஆந் திகதியும் கொண்ட வரைபடத்தில் துண்டு 1 எனக் குறிக்கப்பட்டுள்ள அம்பகஹவத்த என அழைக்கப்படும் பிரிக்கப்பட்டதும் நிர்ணயிக்கப்பட்டதுமான காணி ,**

**காணியின் விஸ்தீரணம் :
இருபத்து மூன்று தசம் ஐந்து பேர்ச் (0ஏ. 0றூ. 23.5பே.)**

**காணியும் அதிலுள்ள அனைத்தும் அடங்கலாக, கீழே விபரிக்கப்படும் விதத்தில் பாதை ஒதுக்கீட்டிலும் அதன் மீதும் பாதைக்குமான உரித்துரிமையுடனும் கூடிய,**

**உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் ஜீ.எல்.பீ.நாணாயக்காரவினால் தயாரிக்கப்பட்ட இலக்கம் 3715உம், 1986, ஏப்பிரல் 8 ஆந் திகதியும் கொண்ட வரைபடத்தில் துண்டு இல. 1 E ( பாதைக்கென 10 அடி அகல ஒதுக்கீடு ) எனக் குறிக்கப்பட்டுள்ள அம்பகஹவத்தை என அழைக்கப்படும் பிடகோட்டேயில் அமைந்துள்ள பிரிக்கப்பட்டதும் நிர்ணயிக்கப்பட்டதுமான**

**மூன்று தசம் ஏழு பூச்சியம் பேர்ச் விஸ்தீரணமுடைய ( 0ஏ.0 றூ.3.70பே.)**

**காணியும் அதிலுள்ள அனைத்தும் அடங்கலாக**

(கடனாளிகள் என்ற வகையில் விஜேசிங்ஹகே நிரோஷன் க்ரிசாந்த பொன்சேக்காவும், பெர்னாடீட் நிலந்தி டயஸ் கருணாரத்ன என்பவர்களினால் கொமர்ஷல் பாங்க் ஒப் சிலோன் பீஎல்சீ இற்கு ஈடுவைக்கப்பட்டுள்ள மேற்குறிப்பிட்டுள்ள ஆதனத்தை.)

என்னால் மேற்சொல்லப்பட்ட காணியை அதே இடத்தில் பகிரங்க ஏலத்தின் மூலம் 2016, மாச்சு மாதம் 11ஆந் திகதி மு.ப. 10.30 மணிக்கு விற்பனை செய்யப்படும்.

***தீர்மானம் பற்றிய அறிவித்தலுக்கு.***- 2015.11.27 ஆந் திகதியுடைய அரசாங்க வர்த்தமானியையும், ''லக்பிம'', ''த ஐலண்ட்'' மற்றும் ''வீரகேசரி'' பத்திரிகைகளையும், பார்க்கவும். மேலும் விற்பனை அறிவித்தல் பற்றிய பிரசுரம் தொடர்பாக 2016.02.19 ஆந் திகதியுடைய அரசாங்க வர்த்தமானியையும், 2016.02.23 ஆந் திகதியுடைய "லக்பிம", "த ஐலண்ட்" மற்றும் "வீரகேசரி" பத்திரிகைகளையும் பார்க்கவும்.

**காணியைச் சென்றடையும் விதம்**.- பொரள்ளை நகர மத்தியிலிருந்து கொட்டா ரோட் மற்றும் ஸ்ரீ ஜயவர்தனபுர மாவத்தை வழியாக சுமார் 3.75 கிலோ மீற்றர் சென்று ( பத்தரமுல்லை நகர மத்திக்கு சுமார் ஒரு கிலோ மீற்றருக்கு முன்பதாக) வலது பக்கமாக கோட்டே ரோட்டுக்குத் திரும்பி, எத்துல் கோட்டே சந்தி வரை சுமார் 100 மீற்றர் பயணித்து ஈ. டப் . பெரேரா மாவத்தை ( கோட்டே ரோட் எனவும் அழைக்கப்படும்) வழியாக சுமார் 1.5 கிலோ மீற்றர் சென்று ( பிட்ட கொட்டே சந்திக்கு சுமார் 3/4 கிலோ மீற்றருக்கு முன்பதாக ) இடது பக்கமாக பெத்தேகான ரோட்டுக்கு திரும்பி, சுமார் 200 மீற்றர் பயணித்து ( உதைபந்தாட்ட சம்மேளனத்திற்கு எதிராக) வலது பக்கமாக 10-12 அடி அகலமான சுபசாதக மாவத்தைக்குத் திரும்பி சுமார் 150 மீற்றர் பயணித்து, காணியைச் சென்றடையும் 10 அடி கொன்கிறீட் பாதைக்குத் திரும்பி சுமார் 25 மீற்றர் தூரத்தில் அமைந்துள்ள ஆதனத்தைச் சென்றடையலாம். இவ்வாதனம் பிடகோட்டே சுபசாதக மாவத்தை,38/7 வரிமதிப்பீட்டிலக்கம் என அடையாளம் காணப்படுகின்றது.

**கொடுப்பனவு செலுத்தும் விதம்**.- வெற்றிபெற்ற கொள்வன வாளர் ஏலமுடிவில் பின்வரும் கட்டணங்களை பணமாக ஏலதாரருக்குச் செலுத்த வேண்டும் :-

(1) கொள்வனவு விலையின் 10% ;
(2) உள்ளூராட்சிமன்ற வரி 1% ;
(3) ஏலதாரரின் தரகுப் பணம் 2.5 % ;
(4) நொத்தாரிசு கட்டணம் 2,000 ரூபா ;
(5) எழுதுவினைஞர் மற்றும் கூவியின் கூலியாக 500 ரூபா ;
(6) விற்பனைக்காக செலவிடப்பட்ட மொத்த விளம்பர செலவுத் தொகை ;
(7) பெறுமதி சேர்க்கப்பட்ட வரி VAT செலுத்தப்பட வேண்டும்.

(8) கொள்வனவு விலையின் மிகுதி தொண்ணூறு சதவீதம் (90%) கொமர்ஷல் பேங்க் ஒவ் சிலோன் பீஎல்சியின் தலைமையகத்தில் அல்லது தலவத்துகொட கிளையில் விற்பனை நாளிலிருந்து

மேலும் உரித்துரிமை உறுதி மற்றும் தொடர்பான ஆவணங்களைப் பற்றிய விபரங்களை கீழ்வரும் உத்தியோகத்தர்களிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம்.

*வேறு விபரங்களுக்காக.- சிரேஷ்ட முகாமையாளர், கொமர்ஷல் பேங்க் ஒப் சிலோன் பீஎல்சீ, இல. 7, சுரம்யா கட்டிடம், தலவத்துகொட. தொலைபேசி இல. : 011-2773551/011-2773452 ; தொலைநகல் இல.: 011-2773553.*

எல். பி. சேனாநாயக்க (சமாதான நீதவான்),
சிரேஷ்ட உத்தரவுபெற்ற ஏலதாரர், விலைமதிப்பீட்டாளர்,
நீதிமன்ற ஆணையாளர்.

இல. 200,
2 ஆவது மாடி,
புதுக்கடை வீதி,
கொழும்பு 12.
தொலைபேசி/தொலைநகல் இல. 011-2445393.
மின்-அஞ்சல் : senaservice@sltnet.lk

2-603

---

**இலங்கை வங்கி**

*1968 ஆம் ஆண்டின் 34 ஆம் இலக்கச் சட்டத்தாலும் 1974 ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்கச் சட்டத்தாலும் திருத்தப்பட்டவாறான இலங்கை வங்கி கட்டளைச் சட்டத்தின் (397 ஆம் அத்தியாயம்) 22 ஆம் பிரிவினதும் அதன் திருத்தங்களினதும் கீழ் விற்பனை அறிவித்தல்*

கடன் தொடர்பு இல. 73843655

*ஏக உரிமையாளர் சமந்தா என்டரபிறைசஸ் அதாவது குகுலகே ஜனக புஸ்பகுமார என யாவரும் அறிந்த திரு. குகுலகே டொன் ஜனக புஸ்பகுமார ஆகியோர் ஈடுவைத்த ஆதனத்தின் விற்பனை*

*இலங்கை வங்கி கட்டளைச் சட்டத்தின் 19 ஆம் பிரிவின் கீழ் இலங்கை வங்கி பணிப்பாளர்கள் சபை எடுத்த தீர்மானத்துக்கமைய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் 2015.08.21 ஆந் திகதிய 1929ஆம் இலக்க வர்த்தமானியிலும் 2015.08.22 ஆந் திகதி சனிக்கிழமை ''டெய்லி நியூஸ்'' ''தினகரன்''''தினமின'', ஆகிய பத்திரிகைகளிலும் வெளியிடப்பட்ட அறிவித்தல்களுக்கமைய நிலுவை முதலையும் விற்பனைத் திகதிவரை வருமதியாக உள்ள வட்டியையும் செலவு மற்றும் மேற்கூறிய குறிப்பிட்ட சட்டத்தின் 26 ஆம் பிரிவின்கீழ் அறவிடக்கூடிய செலவு மற்றும் பணங்களையும் அறவிடும் பொருட்டு இதன்கீழ் குறிப்பிடப்பட்டுள்ள அட்டவணையில் விபரிக்கப்பட்டுள்ள சொத்தையும் நிலமனையையும் இல.50/3, விஹார மாவத்தை, கொலன்னாவ என்னும் முகவரியைச் சேர்ந்த திருவாளர்கள் T&H ஏல நிறுவனத்தின் ஏலதாரர் திரு. T. கருணாரத்ன அவர்களால் 2016.03.09 ஆந் திகதி மு. ப. 10.30 மணிக்கு அதே இடத்தில் வைத்து பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படுமென இத்தால் அறிவிக்கப் படுகின்றது.*

**அட்டவணை**

*1. மேல் மாகாணம், களுத்துறை மாவட்டம் ஹொரணை பிரதேச செயலகப் பரிவில் ஹெரணை பிரதேச சபை எல்லைக்குள் ( கனன்வில உப அலுவலகம்) ரய்கம் கோரளை, கும்புகே பற்றுவில் குடா உடுவ, கிராம அலுவலர் பிரிவில் இல. 614 C உடுவ கிராமத்தில் அமைந்த ''அம்பிடிய'' என அழைக்கப்படும் காணி உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் K. கன்னங்கர தயாரித்த 1996 ஏப்பிறல் 02 ஆந் திகதியிடப்பட்ட வரைபடம் இல. 296/1996 இல் விபரித்த துண்டு 1 என அடையாளமிடப்பட்ட பிரிக்கப்பட்ட குறித்த காணித்துண்டு வடக்கு: பிரதான வீதியும்; கிழக்கு : துண்டுகள் 6,7 ஆகியவற்றின் 1/4 பாகமும்; தெற்கு: W.B எபிஸ் சிங்யோவின் ஆதனமும்; மேற்கு: துண்டுகள் 2உம், 5 உம் எல்லைகளாகக் கொண்டு மேற்குறிப்பிட்ட வரைபடம் இல. 296/1996 இன்படி ஒரு ஏக்கர் ஒரு றூட் மூன்று ஏழு பேர்ச்சு (1ஏ. 1றூ. 37பே.) விஸ்தீரணமுடைய காணியும் அங்கு அமைந்துள்ள கட்டிடங்கள். மரங்கள், பயிர்கள் மற்றும் சகலதுமாகும். இது ஹொரணை காணிப்பதிவகத்தில் C195/35 இல் பதிவு செய்யப்பட்டுள்ளது.*

பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி,

V.D. ஜயலத்,
சிரேஷ்ட முகாமையாளர்.

இலங்கை வங்கி,
ஹொரணை மேற்தரக் கிளை.

2-598

---

**இலங்கை வங்கி**

*1968 ஆம் ஆண்டின் 34 ஆம் இலக்கச் சட்டத்தாலும் 1974 ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்கச் சட்டத்தாலும் திருத்தப்பட்டவாறான இலங்கை வங்கி கட்டளைச் சட்டத்தின் (397 ஆம் அத்தியாயம்) 22 ஆம் பிரிவினதும் அதன் திருத்தங்களினதும் கீழ் விற்பனை அறிவித்தல்*

கடன் தொடர்பு இல. 9534033

*குகுலகே ஜனக புஸ்பகுமார என யாவரும் அறிந்த திரு. குகுலகே டொன் ஜனக புஸ்பகுமார சமந்தா என்டரபிறைசஸ் ஏக உரிமையாளர் ஆகியோர் ஈடுவைத்த ஆதனத்தின் விற்பனை*

*இலங்கை வங்கி கட்டளைச் சட்டத்தின் 19 ஆம் பிரிவின் கீழ் இலங்கை வங்கி பணிப்பாளர்கள் சபை எடுத்த தீர்மானத்துக்கமைய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் 2015.07.24 ஆந் திகதிய 1925ஆம் இலக்க வர்த்தமானியிலும் 2015.07.10 ஆந் திகதி வெள்ளிக்கிழமை ''டெய்லி நியூஸ்'' ''தினகரன்''''தினமின'', ஆகிய பத்திரிகைகளிலும் வெளியிடப்பட்ட அறிவித்தல்களுக்கமைய நிலுவை முதலையும் விற்பனைத் திகதிவரை வருமதியாக உள்ள வட்டியையும் மேற்கூறிய குறிப்பிட்ட சட்டத்தின் 26 ஆம் பிரிவின்கீழ் அறவிடக்கூடிய செலவு மற்றும் பணங்களையும் அறவிடும் பொருட்டு இதன்கீழ் குறிப் பிடப்பட்டுள்ள அட்டவணையில் விபரிக்கப்பட்டுள்ள சொத்தையும் நிலமனையையும் இல.50/3, விஹார மாவத்தை, கொலன்னாவ என்னும் முகவரியைச் சேர்ந்த திருவாளர்கள் T&H ஏல நிறுவனத்தின் ஏலதாரர் திரு. T. கருணாரத்ன அவர்களால் 2016.03.09 ஆந் திகதி மு. ப. 11.00 மணிக்கு அதே இடத்தில் வைத்து பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படுமென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.*

**அட்டவணை**

*1. மேல் மாகாணம், களுத்துறை மாவட்டம் ஹொரணை பிரதேச செயலகப் பரிவில் ஹெரணை பிரதேச சபை எல்லைக்குள் ( கனன்வில உப அலுவலகம்) ரய்கம் கோரளை, கும்புகே பற்றுவில் குடா உடுவ, இல.614 C கிராம அலுவலர் பிரிவில் உடுவ கிராமத்தில் அமைந்த ''அம்பிடிய'' என அழைக்கப்படும் காணி உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் K. கன்னன்கர தயாரித்த 1996 ஏப்பிறல் 02 ஆந் திகதியிடப்பட்ட வரைபடம் இல. 296A/1996 இல் விபரித்த துண்டு 2*

என அடையாளமிடப்பட்ட பிரிக்கப்பட்ட குறித்த காணித்துண்டு. வடக்கு: பிரதான வீதியும்; கிழக்கு: துண்டுகள் 10உம் 11 மற்றும் பாதையும்; தெற்கு: W.D எபிஸ் சிங்யோ, W.D. நுவின்ஸ் சிங்யோ மற்றும் ஏனையோரின் ஆதனமும்; மேற்கு: துண்டுகள் 8, 9 ஆகியவற்றின் 1/4 பாகமும் எல்லைகளாகக் கொண்டு மேற்குறிப்பிட்ட வரைபடம் இல. 296A/ 1996 இன்படி ஒரு ஏக்கர் இரண்டு றூட் (1ஏ. 2றூ. 0பே.) விஸ்தீரணமுடைய காணியும் அங்கு அமைந்துள்ள கட்டிடங்கள், மரங்கள், பயிர்கள் மற்றும் சகலதுமாகும். இது ஹொரணை காணிப்பதிவகத்தில் C195/ 37 இல் பதிவு செய்யப்பட்டுள்ளது.

பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி,

V.D. ஜயலத்,
சிரேஷ்ட முகாமையாளர்.

இலங்கை வங்கி,
ஹொரணை மேற்தரக் கிளை.

2-599

---

## இலங்கை வங்கி

1968 ஆம் ஆண்டின் 34 ஆம் இலக்கச் சட்டத்தாலும் 1974 ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்கச் சட்டத்தாலும் திருத்தப்பட்டவாறான இலங்கை வங்கி கட்டளைச் சட்டத்தின் (397 ஆம் அத்தியாயம்) 22 ஆம் பிரிவினதும் அதன் திருத்தங்களினதும் கீழ் விற்பனை அறிவித்தல்

கடன் தொடர்பு இல. 73843655

குகுலகே ஜனக புஸ்பகுமார என யாவரும் அறிந்த திரு. குகுலகே டொன் ஜனக புஸ்பகுமார சமந்தா என்டரபிறைசஸ் ஏக உரிமையாளர் ஆகியோர் ஈடுவைத்த ஆதனத்தின் விற்பனை

இலங்கை வங்கி கட்டளைச் சட்டத்தின் 19 ஆம் பிரிவின் கீழ் இலங்கை வங்கி பணிப்பாளர்கள் சபை எடுத்த தீர்மானத்துக்கமைய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் 2015.08.21 ஆந் திகதிய 1929ஆம் இலக்க வர்த்தமானியிலும் 2015.08.22 ஆந் திகதிய சனிக்கிழமை ''டெய்லி நியூஸ்'' , ''தினகரன்'',''தினமின'', ஆகிய பத்திரிகைகளிலும் வெளியிடப்பட்ட அறிவித்தல்களுக்கமைய நிலுவை முதலையும் விற்பனைத் திகதிவரை வருமதியாக உள்ள வட்டியையும் மேற் குறிப்பிட்ட சட்டத்தின் 26 ஆம் பிரிவின்கீழ் அறவிடக்கூடிய செலவு மற்றும் பணங்களையும் அறவிடும் பொருட்டு இதன்கீழ் குறிப்பிடப்பட்டுள்ள அட்டவணையில் விபரிக்கப்பட்டுள்ள சொத்தையும் நிலமனையையும் இல.50/3, விஹார மாவத்தை, கொலன்னாவ என்னும் முகவரியைச் சேர்ந்த திருவாளர்கள் T&H ஏல நிறுவனத்தின் ஏலதாரர் திரு. T. கருணாரத்ன அவர்கள் முலம் 2016.03.09 ஆந் திகதி மு. ப. 11.30 மணிக்கு அதே இடத்தில் வைத்து பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படுமென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

### அட்டவணை

மேற்குறிப்பிட்ட உடுவ கிராமத்தல் அமைந்த ''அம்பிடிய'' என அழைக்கப்படும் காணியின் உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் K. கன்னன்கர தயாரித்த 1996 ஏப்பிறல் 02 ஆந் திகதியிடப்பட்ட வரைபடம் இல. 296B/ 1996 இல் விபரித்த துண்டு 3 என அடையாளமிடப்பட்ட பிரிக்கப்பட்ட குறித்த காணித்துண்டு. வடக்கு: பிரதான வீதியும்; கிழக்கு: துண்டுகள் 8,9 ஆகியவற்றின் 3/4 பாகங்களும் ( மிகவும் சரியானது துண்டு 8, 9 இன் 3/4 பகுதி); தெற்கு: W.D எபிஸ் சிங்யோவினதும் ஏனையோரினதும் ஆதனமும்; மேற்கு: துண்டுகள் 6, 7 இன் 1/4 பாகமும் எல்லைகளாகக் கொண்டு மேற்குறிப்பிட்ட வரைபடம் இல. 296B/1996 இன்படி மூன்று றூட் முப்பத்தியேழு பேர்ச் (0ஏ. 3றூ. 37பே.) விஸ்தீரணமுடைய காணியும் அங்கு அமைந்துள்ள கட்டிடங்கள். மரங்கள், பயிர்கள் மற்றும் சகலதுமாகும். இது ஹொரணை காணிப்பதிவகத்தில் C195/ 36 இல் பதிவு செய்யப்பட்டுள்ளது.

பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி,

V.D. ஜயலத்,
சிரேஷ்ட முகாமையாளர்.

இலங்கை வங்கி,
ஹொரணை மேற்தரக் கிளை.

2-600